விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 201 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 24 செவ்வாய்க்கிழமை (08.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### செம்மணி மனிதப் புதைகுழி

# குருதியை உறைய வைக்கும் அதிர்ச்சி

## நேற்றும் 5 எலும்புக்கூடுகள் மீட்பு



*(யாழ்ப்பாணம்)*

தமிழினப் படுகொலையின் மற்றுமோர் சாட்சியமாக உருவெடுத்துள்ள செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் நேற்று மாத்திரம் ஐந்து எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

*(16ஆம் பக்கம் பார்க்க)*

# நாட்டின் பாதுகாப்பில் அரசுக்கு நாட்டமில்லை

## ஆதங்கப்படுகிறார் சரத் வீரசேகர



(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் அசண்டையீனமாகச் செயற்படுகின்றது என முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத்

15ஆம் பக்கம் பார்க்க

# ஈஸ்டர் படுகொலை நீதி நிலைநாட்டப்படும்

## ஜனாதிபதி உறுதி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் பொறுப்புக்கூறும் எனவும் நிச்சயமாக நீதி நிலைநாட்டப்

16ஆம் பக்கம் பார்க்க

# ஆனையிறவில் கோர விபத்து

## பலர் படுகாயம்

(ஆனையிறவு)

கிளிநொச்சி ஆனையிறவுப் பகுதியில் கோர விபத்துச் சம்பவம் ஒன்று நேற்று மாலை

15ஆம் பக்கம் பார்க்க

# முதலிட்ட பணத்தை மீளக் கோரும் அதானி



10ஆம் பக்கம் பார்க்க

# மொழி உரிமையை மறுப்பது சிறிய தவறு அல்ல - ஹர்சன

(கொழும்பு)

எமது நாட்டில் மொழி உரிமைக்கு மதிப்பளிப்பதற்கு முடியாமல் போனமை சிறிய தவறு அல்ல என்பதை நாங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இந்தப் படிப்பினையை சரியாக கற்றுக் கொள்ளாவிட்டால் வரலாறு மீண்டும் வருவது நிச்சயமாகும். அதனால் மொழி உரிமைகள் தொடர்பாக சட்ட அங்கீகாரம் மட்

15ஆம் பக்கம் பார்க்க

# புதிய அரசியலமைப்பை இயற்ற அநுர அரசு மறந்துவிட்டதா?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் மேடைக்கு மேடை புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் எனவும் அரசியலமைப்புப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதியை அந்தக் கட்சி

15ஆம் பக்கம் பார்க்க

# டிஜிட்டல் சேவைகளுக்கு 18 வீத வற் வரி விதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வழங்கப்படும் டிஜிட்டல் சேவைகளுக்கு 18 வீத வற் வரி விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவிப்பு அண்மையில் உள்நாட்டு வருமான வரி

15ஆம் பக்கம் பார்க்க




## நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகை அடிப்படையில் வாகனம் பெறுவதற்கான கேள்விவிலை கோருதல்
## நல்லூர் பிரதேச சபை - கொக்குவில்

நல்லூர் பிரதேச சபை அலுவலக பயன்பாட்டிற்கு உற்பத்தி ஆண்டு 2000 அல்லது அதற்கு பிற்பட்ட வாகனம் ஒன்றினை வாடகை அடிப்படையில் பத்து மாதங்களுக்கு வழங்குவதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விபரங்களினை நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிட்டு, 09.07.2025 - 22.07.2025 வரை அலுவலக நேரத்தில் நிதிக்கிளையில் ரூபா 1000.00 (மீள்பெறாத தொகையினை) பணமாகச் செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 22.07..2025 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னராக எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:-
நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகம் - 021 222 2700

தலைவர்,
பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை.

## INVITATION FOR BID
## NALLUR PRADESHIYA SABHA, KOKUVIL

The Chairman, Procurement Committee on behalf of the Nallur Pradeshiya Sabha, Kokuvil, invites sealed bids from eligible and qualified bidders for the Hiring of following Vehicle.

| S.No | Bid No | Name of Item/ Work | Security cash Deposit (Refundable) | Non-Refundable Fees |
|---|---|---|---|---|
| 01 | NP/14/41(10)/Acct/Proc/Vehicle Hiring - 2025 | Hiring of Vehicle (01 Nos) | 25,000.00 | 1,000.00 |

1. Interested bidders may obtain further information from NallurPradeshiyaSabha, 14/5 Karuvapulam Road, Kokuvil (T.P No:021 222 2700) and inspect the bidding documents at the same place on any working days from 09.07.2025 until 22.07.2025 from 09:00 hrs to 15:00 hrs.
2. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Nallur Pradeshiya Sabha, 14/5, Karuvapulam Road, Kokuvil from 09.07.2025 until 22.07.2025 from 09:00 hrs to 15:00 hrs on working days upon payment of non-refundable fees of Rs. 1 000.00. The method of payment should be by cash.
3. Bid shall be delivered or sent by hand or registered post to the Chairman, Nallur Pradeshiya Sabha, 14/5, Karuvapulam Road, Kokuvil on or before 10.00 hrs on 22.07.2025 Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
4. All bids must be accompanied by a bid security and the validity period of Bid security is given in table above.

**Chairman,**
**procurement Committee,**
**Nallur Pradeshiya Sabha.** (C-3353) 08.07.2025

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
செல்வலிங்கம் தர்மதேவி

தோற்றம்
21.06.1948

மறைவு
06.07.2025

வடமராட்சியில் கல்விப்பாரம்பரியம் நிறைந்த மனோகரா அல்வாயில் பிறந்து வளர்ந்து ஒரு கிராமத்தின் தலைமை அதிகாரியைக் கரம் பிடித்து இல் வாழ்க்கையின் சிறந்த அறுவடையாக ஐந்து பிள்ளைச் செல்வங்களைப் பெற்று சிறந்த முறையில் கல்வி அறிவூட்டி கணவனை இழந்தாலும் பிள்ளைகளுக்கு தாயாகவும் தந்தையாகவும் இருந்து அனைவரையும் சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் உயர்த்தியுள்ளார். குடும்பத்தில் நல்ல மகளாக, அன்பு மனைவியாக, சிறந்த மருமகளாக, எல்லோருக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளார். இப்படியான உத்தமி எங்களது குடும்பத்தின் இரண்டாவது சம்மந்தியாக இணைந்துள்ளதே ஒரு வரப்பிரசாதமாகும். அவர் காலமாகிய செய்தி எங்கள் குடும்பத்திற்கு தீராத சோகத்தைத் தந்துள்ளது. அவருக்கு எமது குடும்பத்தின் சார்பில் கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆலடி விநாயகனை வேண்டுவதோடு அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைக் தெரிவித்துக் கொள்கிறோம்.

வளர்பிறை,
ஊரெழு கிழக்கு. (4743)

பிரிவித்துயருடன்
கலாநிதி ப.இராசேந்திரம்(JP)
குடும்பம்

## கெஹலியவுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

தரமற்ற தடுப்பூசிகைக் கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெல்ல உட்பட 12 பிரதிவாதிகளை எதிர்வரும் 11 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு நிரந்தர மூவரடங்கிய மேல் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகளை கையளிக்க நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இவ்வாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

(ந-7)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
18.07.1949

இறப்பு:
08.07.2015

அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட

**அமரர் கதிரவேலு சந்திரலிங்கம்**(வெள்ளை)

(ஓய்வுநிலை மேற்பார்வையாளர் அச்சுவேலி பனைதென்னைவள அ.கூ.சங்கம்)

**திதி : அபரபக்க ஸப்தமி**

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ – வேரோடி
விழுது விட்டபெரு விருட்சமே எமை – பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ
பத்தாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு மறைவதில்லை.
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

(4737)

கோப்பாய் தெற்கு,
கட்டப்பிராய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்

## Job Vacancy

We are well established Construction Company in Jaffna for over a period 10 years we are looking for These position

- **Quantity Surveyor**
  - NCT/ HND or Equivalent
  - Minimum 5 years experience
  - Age : 25 - 45
- **Technical Officer**
  - NCT/ HNDE or Equivalent
  - Minimum 3 years experience
  - Age : 25 - 40

**Sent your CV with Contact No:**
**lionengineering9@gmail.com**
**076 200 4827, 075 546 1853**

(4741)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
02.10.1940

மறைவு
06.07.2025

எமது பிரதேசசெயலகத்தின் தாபனக்கிளையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **அபிராம் சிறோமி** அவர்களின் பாசமிகு தாயார்

**அமரர் செல்வகுலசிங்கம் திலகவதி**

அவர்கள் 06.07.2025 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-3355)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்

# சர்வதேச நீதிகோரி

# பிரித்தானியாவில் போராட்டம்!

(லண்டன்)

**செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதிகோரியும், சர்வதேச கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தி தமிழ் அமைப்புகள் இணைந்து ஐக்கிய இராச்சியத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்திற்கு முன்னால் வெகுசனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

1995 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டு வரையில் செம்மணிப் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டுள்ள போதிலும், அது குறித்த மர்மம் இருள் சூழ்ந்ததாகவே காணப்படுகிறது.

இனவழிப்பிற்கு ஆதாரமான இந்தக் குற்றச் செயல்களுக்கான காரணமோ, இதற்கு அதிகாரம் வழங்கிய தரப்புக்கள் யார் என்பதோ, மீளவும் இது போன்ற மனிதப் புதைகுழிகள் உருவாக்கப்படாது என்பதற்கான பொறுப்புக்கூறலோ இது வரை வெளிப்படுத்தப்படவில்லை.

எனவே இருள் சூழ்ந்திருக்கும் செம்மணி மனிதப் புதைகுழி விடயத்திற்கு ஒளி பாய்ச்சப்படல் வேண்டும்.

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் யாழ்ப்பாணத்திற்கான பயணத்தை மேற் கொண்ட நிலையில் அவரது கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் அமைந்தது.

செம்மணி மாத்திரமல்லாது வடக்கு- கிழக்கில் உள்ள 100 இற்கும் மேற்பட்ட பல்வேறு இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் தொடர் பிலும் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் முகமாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் அதிகளவில் பொது மக்கள் இணைந்து கொண்டனர். (நி)

## நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரிக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

(கொழும்பு)

நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரிக்குமாறு, விவசாயிகள், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி, உலர்த்தப்படாத நெல் ஒரு கிலோகிராமுக்கு 120 ரூபாவையும், உலர்த்தப்பட்ட ஒரு கிலோகிராம் நெல்லுக்கு 140 ரூபாவையும் உத்தரவாத விலையாக நிர்ணயிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது, ஒரு கிலோகிராம் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள 102 ரூபாய் விலையானது, பாரிய ஆலை உரிமையாளர்களுக்கே பயனளிப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## ஆணைக்குழுவின் சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகள் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று முதல் அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக, தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, வாக்காளர் பதிவு தகவல்களைச் சரிபார்த்தல், இணையவழி பதிவு, வாக்காளர் அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் ஏனைய மாவட்டங்களுடனான அனைத்து இணையவழி சேவைகளும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)


இதய தெய்வங்களின் நான்காம் ஆறாம் ஆண்டு நினைவலைகள்

4ஆம் ஆண்டு

மண்ணில் 08 - 10 - 1942



விண்ணில் 06 - 10 - 2021

அமரர்.செல்வராசா
கனகம்மா (குஞ்சம்மா)
திதி.புரட்டாதி-அமாவாசை
21.09.2025

6ஆம் ஆண்டு

மண்ணில் 05 - 02 - 1964



விண்ணில் 14 - 07 - 2019

அமரர்.செல்வராசா
தயானந்தன்
ஆனி பூர்வபட்ச திரயோதசி
08.07.2025

"வாழும் நாள் எல்லாம் உங்கள் நினைவோடு தான்"
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

(சி-3354)

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

அன்பான கணவன், பாசமுள்ள ஐயா
வ.செல்வராசா மற்றும் உறவுகள்.


## தேங்காய் விலையில் வீழ்ச்சி




(கொழும்பு)

உள்ளூர் சந்தையில் தேங்காய் விலை வேகமாக சரிந்து வருவதாலும், தேங்காய் விற்பனை அதிகரிப்பதாலும் தங்கள் வருமானமும் அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களாக, ஒரு தேங்காய் ரூபா. 220க்கு விற்கப்பட்டது, தற்போது, ரூபா.100 முதல் ரூபா.170 வரை பல்வேறு விலைகளில் தேங்காய்கள் விற்கப்படுகின்றன.

சில வியாபாரிகள், அதிக இலாபத்துடன் தேங்காய்களை விற்பனை செய்வதாகவும், அப்போது தேங்காய் விற்பனை குறைந்ததால் தங்கள் வருமானமும் குறைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

எதிர்வரும் மாதங்களில் தேங்காய் விலை மேலும் குறைவடையும் என்றும், தற்போது சந்தையில் ஏனைய தேவையை விட தேங்காய் உற்பத்தி அதிகமாக இருப்பதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். (நி)


## யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டிட தொகுதியின் நான்கு மாடிகளினதும் மலசலகூடங்களினது கழிவுகள் வெளியேறும் குழாய் வழி சீரமைத்தல் வேலைகளுக்கான கூறுவிலை கோருதல்.**

1. எமது சபையின் நிதி ஒதுக்கீட்டில் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறான வேலைத் திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளது.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணமொன்றை யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபையில் 08.07.2025ஆம் திகதியிலிருந்து 22.07.2025 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000.00 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரரர்கள் தலைவர் யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தொலைபேசி இலக்கம் 021 222 2324 அல்லது Email Jaffnadcc1@gmail.com ஆகியவற்றின் மூலம் மேலதிக தகவல்கள் தரவுகளை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக வேலை நாட்களில் 08.07.2025 ஆம் திகதியிலிருந்து 22.07.2025 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை இடம்பெற வேண்டிய இடத்தினைப் பார்வையிடலாம்.
4. கேள்வி கூறுகளை தயாரித்து தலைவர் யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை இல. 12. கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 24.07.2025 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியாதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்வி கூறுகள் நிராகரிக்கப்படும். கேள்வி கோரல் நேரம் முடிந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விக்கூறுகள் திறக்கப்படும்.

| கேள்வி எண் | வேலை விபரம் |
|---|---|
| CEB/2025/14 | Replacement discharge pipe line of the Veerasingam Hall Building complex Jaffna |

தலைவர், யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை (சி-3353)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனிக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த முதலமைச்சர் ஸ்டாலின்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் எம்.எஸ். டோனி நேற்று தனது 44ஆவது பிறந்த நாளை கொண்டாடியிருந்தார். இந்த நிலையில் எம்.எஸ். டோனி பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாட்டு முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்திருந்தார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது.

அழுத்தமான சூழ்நிலையையும் தனது ஒவ்வொரு நகர்வின் மூலம் கவிதையாய் மாற்றிய கிரிக்கெட்டின் தனித்துவமிக்க அரிய வீரர் மகேந்திர சிங் டோனிக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்! பெருமை பிறப்பிலேயே வருவதல்ல, எடுக்கும் ஒவ்வொரு முடிவினாலும், ஒவ்வொரு ஓட்டத்தினாலும், அமைதியாக ஈட்டுகின்ற ஒவ்வொரு வெற்றியாலும் கட்டமைக்கப்படுவது என நீங்கள் காட்டியிருக்கிறீர்கள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார். (3)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் அரை மரதனோட்டப் போட்டியானது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகி இடம்பெற்றிருந்தது. இதில் வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளுக்கு வெற்றிக்கேடயங்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**படம் - சதீஸ்**

# இந்தியா – இங்கிலாந்து

## 2ஆவது டெஸ்ட் தொடரில் இந்திய அணி அபார வெற்றி



இந்திய மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 336 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 587 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் சுப்மன் கில் 269 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இதனையடுத்து முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 407 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதற்கமைய 180 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 6 விக்கெட்டுகளை இழந்து 427 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இந்தநிலையில் இங்கிலாந்து அணிக்கு 608 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்படி போட்டியின் ஐந்தாம் நாள் ஆட்டமான இன்று 608 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 271 ஓட்டங்களை மாத்திரமே பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பில் ஆகாஷ் டீப் 6 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக சுப்மன் கில் தெரிவு செய்யப்பட்டார்.

இந்திய அணியின் குறித்த வெற்றியுடன், இரண்டு அணிகளுக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற அடிப்படையில் சமநிலைக்கு வந்துள்ளது. (3)




இலங்கை டென்னிஸ் சம்மேளத்தின் அனுசரணையுடன் கடந்த மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடைபெற்ற தேசிய மட்ட 10 வயதிற்குட்பட்ட தனிநபர் டென்னிஸ் போட்டிகளில் ஜி.கே.டென்னிஸ் அக்கடமி வீரர்கள் பலர் தமது வெற்றிகளை பதிவு செய்துள்ளனர்.

# ஐ.சி.சி இற்கு புதிய தலைமை




சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக சஞ்சோக் குப்தா இன்றைய தினம் நியமிக்கப்பட்டார்.

ஜியோஸ்டாரில் விளையாட்டு மற்றும் நேரடி அனுபவங்கள் பிரிவின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருக்கும் சஞ்சோக் குப்தா, நேற்று ஐ.சி.சியின் 7ஆவது தலைமை நிர்வாக அதிகாரியாகப் பொறுப்பேற்றார்.

2020 ஆம் ஆண்டு இடைக்காலப் பொறுப்பிலும் பின்னர் 2021 ஆம் ஆண்டு முழுநேர அடிப்படையிலும் பொறுப்பேற்ற பிறகு இந்த ஆண்டு ஜனவரியில் அந்தப் பொறுப்பிலிருந்து விலகிய ஜெஃப் அலார்டிஸ்க்குப் பதிலாகப் பொறுப்பேற்றார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி விவகாரத்தில் தமிழினம் கொதித்தெழ வேண்டும்!



## திரைப்பட இயக்குநர் ரி.ராஜேந்தர் வலியுறுத்து

(சென்னை)

**பாத்தி கட்டி செடி வளர்ப்பார்கள் ஆனால் சித்துப்பாத்தியிலே எங்களுடைய தொப்புள் கொடி உறவுகளை இவர்கள் புதைத்து வளர்த்திருக்கிறார்கள். தமிழினப் படுகொலைக்கு ஒரு சர்வதேச நீதி கிடைக்க வேண்டும் எனத் தென்னிந்தியப் பிரபல இயக்குநரும் நடிகரும், இசையமைப்பாளருமான ரி.ராஜேந்தர் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,செம்மணி சித்துப்பாத்தி மயானத்திலே அகழ்வாராய்ச்சி பணிகளின் போது இதுவரை 44 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டும், 47 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டும் உள்ளன.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த அந்தப் பகுதியில் இந்த சிங்கள இராணுவத்தின் வெறியாட்டத்தையும், அந்த ஓநாய்களினுடைய களியாட்டத்தையும், மயானத்தில் அவர்கள் ஆடிய ஆட்டத்தையும் தமிழர்கள் மீது அவர்கள் கொண்ட காட்டத்தையும் சர்வதேச உலகம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த அந்த இடத்தில் அவர்கள் எங்களைப் புதைக்க விடுவதுமில்லை, எரிக்க விடுவதுமில்லை. அவர்கள் தமிழர்களை உயிரோடு மாய்த்தார்களா? அல்லது தமிழர்களை உயிரோடு புதைத்தார்களா? இந்தப் புதைகுழிக்குள்ளே இத்தனை உடல்கள் மீட்கப்படுகின்றன. தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள் வந்து கொண்டே இருக்கின்றன. இதைப் பார்க்கும்போது தமிழர்களாகிய எமது நெஞ்சம் பதைபதைக்கிறது.

மயானத்திலே பிணங்கள் எரிக்கப்பட்டால் அதுதான் வெந்து கொண்டிருக்கும். ஆனால் எங்களுடைய தமிழினத்தின் அந்த எலும்புக் கூடுகளை இவர்கள் தோண்டி தோண்டி எடுக்கின்ற போது எங்களுடைய நெஞ்சம் வெந்து கொண்டிருக்கின்றது. அடி வயிறு பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது.

எங்கள் இனத்தின் மீது கொண்ட பகையின் காரணமாக இந்த அளவிற்கா...? என்ன அநியாயம். செம்மணியில் தோண்டி எடுக்கப்பட்ட அந்த எலும்புக் கூடுகள் யார்? எண்ணி பார்க்கிறேன். சேயைக் கட்டி அணைத்த வண்ணம் தாயை கண்டெடுத்திருக்கிறார்கள். புத்தகப் பையை ஏந்திப் பிடித்த சிறுவனைக் கொன்று குவித்திருக்கிறார்கள். உயிரோடு வைத்து புதைத்திருக்கிறார்களே நெஞ்சம் பதை பதைக்கிறது.

இதை எல்லாம் பார்க்கின்ற போது சர்வதேச அளவிலே எமது மக்களுக்கு ஒரு நீதி கிடைக்க வேண்டும். அந்த நீதிக்காக தமிழர்கள் ஒவ்வொருவரும் நாங்கள் தொப்புள் கொடி உறவுகளாக குரல் கொடுத்துக்கொண்டே இருப்போம் என அவர் தெரிவித்தார். (நி-104)



வணிக தினம் மற்றும் வணிக வாரத்தை முன்னிட்டு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் வணிக சந்தை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வணிக பாட ஆசிரியர் சக்திவடிவேல் பிரதீபன் தலைமையில், வணிகப்பிரிவு மாணவர்களால் இந்த வணிக சந்தை முன்னெடுக்கப்பட்டது.

(படம்-கஜிந்தன்)


## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 20 – 12 – 1954



விண்ணில் 06 – 07 – 2025

அமரர்.திரு.சின்னத்தம்பி பாலையா

கும்பலை, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் எமது சாங்கத்தின் முன்னாள் தலைவரும், யாழ் மாவ.ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம், வலி.ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி மானிப்பாய், கிராமிய வங்கிகளின் சமாசம் மற்றும் யாழ் மாவட்ட சித்த மருந்துகள் உ.வி.வை. சே.கூ. சங்கத்தின் முன்னாள் நிர்வாக உறுப்பினரும் ஆகிய திரு.சின்னத்தம்பி - பாலையா அவர்கள் 06.07.2025 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். இவரது குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள். பணிப்பாளர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்– அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
சுன்னாகம்.ப.தெ.வ.அ.கூ.சங்கம்.(மின்சார நிலைய வீதி, சுன்னாகம்)

(சு-3351)


## இராசிபலன்

08.07.2025
ஆனி 24 , செவ்வாய்க்கிழமை
திரயோதசி பின்னிரவு 1.13 மணிவரை

கேட்டை பின்னிரவு 4.24 மணிவரை
சுபநேரம் 10.28 - 11.58 மணிவரை
இராகுகாலம் 2.58 - 4.28 மணிவரை
பிரதோச விரதம் சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
கார்த்திகை.

வளவன்

**மேஷம்** — வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**கடகம்** — மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**துலாம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கூடும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும்.

**மகரம்** — பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பலரது அன்பிற்கு பாத்திரமாவீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**ரிஷபம்** — உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன் தொல்லைகள் தீரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்** — உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** — எடுத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, உறவினர் பகை மாறும்.

**கும்பம்** — வெளியூர் பயணங்கள் எண்ணிய படியே கைகூடும், என்றோ நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்** — கனவு பலிதமுண்டு, விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், வியாபார வளர்ச்சியுண்டு, ஆரோக்கியம் சீராகும், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.

**கன்னி** — மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**தனுசு** — கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப விரயங்கள் மேலோங்கும் நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**மீனம்** — எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், மனக்குழப்பம் தீரும் வாய்ப்புண்டு.

**சொர்க்கத்தின் இன்பத்தை அறிய நரகத்தின் துன்பத்தை உணர்ந்திருக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழி

## யாராலும் மறக்க முடியாத கொடூர வரலாறு

# இனி நீதியே தீர்வாக வேண்டும்!



## சட்டக்கல்லூரியிலிருந்து ஒலித்த குரல்

**(தருமபுரம்)**

**செம்மணி புதைக்குழி - இது ஒரு பெயர் மட்டுமல்ல. இது யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழர்களின் மறைக்கப்பட்ட கதைகள், அழிக்கப்பட்ட உயிர்கள், அடக்கம் செய்ய முடியாத நினைவுகளின் அடையாளம் என இலங்கை சட்டக் கல்லூரி இறுதி வருட மாணவன் தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

1996ஆம் ஆண்டு, கிருஷாந்தி குமாரசுவாமி (18 வயது) கொடூரமாக பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு அவரோடு சேர்த்து அவரது குடும்பத்தைச் சேர்ந்த மேலும் மூவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், தமிழர் சமூகத்தை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த மனித குலத்தையும் சோகத்தில் ஆழ்த்தியது. இது ஒரு குடும்பத்தின் அழிவாக மட்டுமல்ல ஒரு இனத்தின் நெஞ்சைத் துளைக்கும் கொடூரத்தை வெளிக் கொணர்ந்தது.

அந்த வழக்கில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டாலும், இராணுவ வீரர் சோமரத்ன ராஜபக்ச அளித்த அதிர்ச்சிகரமான வாக்குமூலம் - 600இற்கும் மேற்பட்ட தமிழர்கள் செம்மணியில் பொதுப் புதைகுழிகளில் புதைக்கப்பட்டதாகவும், 16 இடங்களைத் தானே அடையாளம் காணக்கூடியதாகவும் இருக்கும் எனக் கூறியதிலிருந்து, உண்மை இன்னும் பெரிதாக இருப்பதை எச்சரித்தது.

அதன்படி 1999இல் அகழ்வுகள் நடைபெற்றபோது, 25 புதைக்குழிகள் அகழப்பட்டு, 19 மனித எச்சங்கள்- குழந்தைகளின் எச்சங்கள் உள்ளடங்கலாக -கண்டெடுக்கப்பட்டன. இது சாதாரண தகவல் அல்ல. இது மனித உரிமை மீறல்களின் மரணச் சான்றிதழ்கள்.

யுத்த காலத்தில் இதுவரை காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியோ, தீர்வோ கிடைக்காமல் இருந்து வரும் நிலையில், செம்மணி புதைகுழி மீண்டும் தமிழ் மக்களுக்கிடையே ஒரு ஆழ்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இக்கொடூர சம்பவங்களின் பின்னணியில், உண்மையை வெளிக்கொணரவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைக்கப்பெறவும் அரசாங்கம் தமது முழுக் கவனத்தை செலுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.வடக்கு, கிழக்கு மற்றும் இலங்கையின் பிற பகுதிகளில் வாழும் அனைத்து தமிழர்களின் உரிமைகளுக்காக, சட்டக்கல்லூரி மாணவர்கள் எப்போதும் குரல் கொடுப்பார்கள் என்று நம்பிக்கையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (8-316)

# மக்களுடைய காணிகளை விடுவிக்குக; இல்லையேல் போராட்டம் வெடிக்கும்

## காணிக்கான மக்கள் உரிமை இயக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் J/435 கிராம சேவகர் பிரிவில் மக்களின் காணிகள் இரகசியமான முறையில் கடற்படையால் அளவீடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண காணிக்கான மக்கள் உரிமை இயக்கத்தின் தலைவர் இ.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தனது இல்லத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியான J/ 435 கிராம சேவகர் பிரிவில் அமைந்திருக்கின்ற மக்களின் மீன்பிடி நிலங்கள், மக்களுக்குரிய காணிகள் திருகோணமலையில் இருந்து வந்த கடற்படையின் ஒரு குழுவால் மிக இரகசியமாக அளவீடு செய்யப்பட்டுள்ளது.

தங்களுடைய சொந்தக் காணிகள் கடற்படையினரால் அளவீடு செய்யப்படுவதை அறிந்து அங்கு இருந்த ஒரு சில மக்கள் கடற்படையிடம் கேள்வி எழுப்பிய போது உங்களுடைய காணி என்றால் அனுமதிப் பத்திரத்தைக் காட்டுமாறு தெரிவித்ததாக மக்கள் கூறுகின்றனர்.

சுண்டிக்குள பகுதியில் காணப்படும் அதிகளவான காணிகள் அரசகாணிகளாக காணப்படுகிறது. அங்கே வசித்த மக்களின் காணிகளுக்கு உறுதி இருக்காது. மக்கள் காலா காலம் அந்தக் காணியில் தான் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அவர்கள் வாழ்ந்த காணியை தற்பொழுது சுவீகரிப்பதற்காக கடற்படை முயற்சிக்கின்றது.

அந்தப் பகுதியில் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. வீடுகள், கிணறுகள், அங்கே மக்களால் பராமரிக்கப்பட்ட மரங்களும் இருக்கின்றன.

இது தொடர்பாக அப்பகுதி கிராம அலுவலருக்கோ, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலருக்கோ தெரியப்படுத்தப்படாமல் அளவீடு முன்னெடுக்கப்பட்டது.

ஒரு பிரதேசத்தில் ஒரு காணியை அளவீடு செய்ய வேண்டும் என்று சொன்னால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். மீனவ சங்கம், பிரதேச செயலர், கிராம அலுவலர், காணிக் கிளையினர் ஆகிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தாமல் மிக இரகசியமாக இந்தக் காணிகளை அளவீடு செய்துள்ளார்கள்.

காலப்போக்கில் இந்தப் பகுதியில் கடற்றொழில் செய்கின்ற மக்கள் கடற்றொழில் செய்ய முடியாத நிலைமை உருவாகப் போகின்றது. சுண்டிக்குள பகுதியில் கடற்படையின் தளங்கள் விஸ்தரிக்கப்படப் போகின்றது.

மக்களுடைய காணிகள் மக்களுக்கு விடுவிக்கப்பட வேண்டும் இல்லை என்று சொன்னால் மக்களை ஒருங்கிணைத்து இந்தக் காணிகளை விடுவிப்பதற்கான போராட்டங்களை செய்யப் போவதாக வடமாகாண காணிக்கான மக்கள் உரிமை இயக்கத்தின் தலைவர் இ.முரளிதரன் தெரிவித்தார். (8-104)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின். நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும். நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு. கல்லூரியின் சிவ ஞானசோதி கலையரங்க மண்டபத்தில் கல்லூரி முதல்வர் த. தயானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக. வடக்கு மாகாண ஆளுநர். நா. வேதநாயகன். சிறப்பு அதிதியாக. வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி ஜமுனா ராஜசீலன் கௌரவ அதிதியாக கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர் க. நித்தியானந்தம் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 500 | 350 | 500 |
| தக்காளி | 180 | 350 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 300 | 250 |
| கோவா | 300 | 450 | 500 | 300 | 400 |
| கரட் | 600 | 500 | 500 | 370 | 500 |
| பூசணி | 120 | 180 | 140 | 120 | 200 |
| புடோல் | 150 | 120 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 600 | 700 | 600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 300 | 250 | 400 |
| பயற்றங்காய் | 350 | 400 | 300 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 450 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 250 | 300 | 300 | 240 | 250 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 550 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 600 | 420 | 600 |
| போஞ்சி | 400 | 550 | 500 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | 350 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 100 | 80 | 120 | 50 | 100 |
| தேசிக்காய் | 350 | 300 | 350 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 120 | 80-150 | 130-170 |
| இராசவள்ளி | 600 | 700 | 700 | 580 | 600 |
| வெங்காயப்பூ | 400 | 600 | 500 | -- | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 200 | 100 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏலத்துக்கு வரும் 14 சொகுசு வாகனங்கள்

(கொழும்பு)

ஆறு டொயோட்டா லேண்ட் குரூசர் வாகனங்கள் உட்பட 14 சொகுசு வாகனங்களை ஏலம் விடுவதற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு கேள்விவிலை மனுக்கோரலை கோரியுள்ளது.

தேவையற்ற பொது நிதியைக் குறைப்பது குறித்த அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடியின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி இந்த வாகனங்கள் ஏலம் விடப்படுகின்றன.

ஏலம் விடப்படும் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், விண்ணப்பங்கள் அமைச்சில் கிடைக்கும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி)

# ஆறு மாதங்களில் 1,351 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் கடந்த 6 மாதங்களில் நிகழ்ந்த வீதி விபத்துகளின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

அதன்படி, 1,274 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அவற்றில் 1,351 பேர் உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் 1,166 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அவற்றில் 1,222 பேர் உயிரிழந்தனர்.

கடந்த ஆண்டை விட இந்த வருடத்தில் வீதி விபத்துகள் அதிகம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# கட்டாக்காலிகளின் வாழ்விடமானது வடமராட்சி கிழக்கு மைதானம்

## பொதுமக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பொது மைதானம் கட்டாக்காலி மாடுகளின் வாழ்விடமாகக் காணப்படுவதாக என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உரிய பராமரிப்பு இன்றியும் ஒரு பக்க வேலியின்றியும் காணப்படும் வடமராட்சி கிழக்கு பொது மைதானத்தில் நாளாந்தம் நூற்றுக்கணக்கான மாடுகள் படுத்து உறங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பொது மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் பயிற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலை கடந்த பல வருடங்களாக காணப்படுகின்றது. இது தொடர்பில் உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்திய போதும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே வடமராட்சி வீரர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள், உடனடியாக பொது மைதானத்தின் வேலிகளைச் சரி செய்து பொது மைதானத்தின் தரத்தை பேணுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

# சிவபூமி திருவாசக அரங்க திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சிவபூமி திருவாசக அரங்க திறப்பு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வைத்திய நிபுணர் (அவுஸ்திரேலியா) வை.மனோமோகன் சிவகௌரி தம்பதிகளும் சிறப்பு விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் விழாவின் ஆசியுரையினை சண்டிலிப்பாய் சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் சிவஸ்ரீ.சாப.வாசுதேவகுருக்கள் மற்றும் வேதாந்தமட முதல்வர் ஸ்ரீ வேத வித்தியா சாகர் சுவாமிகள் ஆகியோரும் வரவேற்புரையினை சிவபூமி அறக்கட்டளை உப தலைவர் வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா, வாழ்த்துரையினை யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை மற்றும் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோரும் சிறப்புரையினை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஆ)

# INVITATION FOR BIDS (IFB)

## IFB No:2025/03

## VELANAI PRADESHIYA SABHA, VANGALAVADY JUNCTION, VELANAI.

1. The **Chairman, Department Procurement Committee**, on behalf of the Velanai Pradeshiya Sabha Invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from address **given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-07-08 To 2025-07-20** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. **on or before 10.30 a.m as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall** , Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. commencing at **11.00 A.M as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2025-07-08 To 2025-07-20 | |
| Pre-Bid Conference | At 11.00 A.M on 2025-07-15 | |
| Closing and Opening of Bids | At 10.30 A.M on 2025-07-21 | |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(18)/02/PSDG/02/2025 | Purchasing Street Lights | 0.59 | 30 | C9 or above in Highway Construction | 1500.00 | 5983.00 | 07.10.2025 | 09.09.2025 |
| NP/14/41(18)/02/PSDG/03/2025 | Renovation Of Bus Halt at Aathisoody Veethy | 0.177 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 1770.00 | 07.10.2025 | 09.09.2025 |
| NP/14/41(18)/02/PSDG/04/2025 | Renovation Of Bus Halt at Pungudutivu Hospital Junction | 0.251 | 60 | C9 or above in Building Construction | 1500.00 | 2512.00 | 07.10.2025 | 09.09.2025 |
| NP/14/41(18)/02/Maintenance/01/2025 | Renovation Of Pilgrimage Monastery Toilet Nainativu | 1.21 | 60 | C9 or above in Building Construction | 1500.00 | 12100.00 | 07.10.2025 | 09.09.2025 |

**Chairman, Divisional Procurement Committee(DPC)**
**Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai.** **08.07.2025**

(C-3352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் சீன அதிபர்



(பீஜிங்)

வாழ்நாள் ஜனாதிபதியாகக் கருதப்படும் சீனாவின் ஷி ஜின்பிங், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரிவுகளுக்கு பிரதிநிதிகளை நியமித்து தன் 12 ஆண்டுகால ஆட்சியில் முதன் முறையாக அதிகாரத்தை பகிர்ந்தளிக்க தொடங்கியுள்ளார்.

நம் அண்டை நாடான சீனாவில் மக்களாட்சி முறை கிடையாது. சீன கம்யூனிஸ்ட் கட்சியே அதிகாரம் பொருந்திய அமைப்பு. அதன் உயர் மட்ட தலைவரே ஜனாதிபதியாகவும், அரசின் பிற முக்கிய பதவிகளுக்கும் வர முடியும்.

அந்த வகையில் கடந்த 2012இல் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலரானவர் ஷி ஜின்பிங், 72. இதையடுத்து 2013ல் சீனாவின் அதிபரானார். அந்நாட்டின் மற்றொரு முக்கிய பதவியான மத்திய இராணுவ கமிஷன் தலைவர் பதவியும் அவர் வசமே உள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலராக ஒருவர் 10 ஆண்டுகள் நீடிப்பது மரபாக இருந்தது. அரசு நிர்வாகம் மற்றும் இராணுவத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஷி ஜின்பிங் அந்த மரபை உடைத்தார்.

இதனால் வாழ்நாள் ஜனாதிபதியாக என ஷி ஜின்பிங் கருதப்படுகிறார்.

இது தற்போது கட்சிக்குள் அதிகார போட்டியை உருவாக்கியுள்ளதாக சில மாதங்களுக்கு முன் வெளிநாடு வாழ் சீன அதிருப்தி சமூகத்தினரால் தகவல் கசியவிடப்பட்டது.

இந்நிலையில், ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரமிக்க 24 உறுப்பினர்கள் உடைய அரசியல் குழு கூட்டம் ஜூன் 30இல் கூடியமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அமெரிக்காவில் வெள்ளப்பெருக்கு; உயிரிழப்பு அதிகரிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஞாயிற்றுக்கிழமை 78 ஆக அதிகரித்துள்ளது. அதில் 28 சிறுவர்களும் அடங்குவர்.

டெக்சாஸ் மாநிலத்தில் வெள்ளப் பெருக்கு அதிகளவு ஏற்பட்டமையப்பகுதியான ஹில் கன்ட்ரியில் உள்ள கெர் கவுண்டி மாவட்டத்தில் 28 சிறுவர்கள் உட்பட 68 பேர் உயிரிழந்துள்ளனர்.

டெக்சாஸில் வேறு இடங்களில் மேலும் 10 பேர் உயிரிழந்துள்ளதோடு, 41பேர் காணாமல் போயுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


கோடைக்கால முகாமில் இருந்து காணாமல் போன மாணவிகளை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அமெரிக்க சுதந்திர தின விடுமுறை நாளான கடந்த வெள்ளிக்கிழமை மத்திய டெக்சாஸ் பகுதியில் பெய்த மழையினால் அருகிலுள்ள குவாடலூப் நதி கரைகளை உடைத்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## செங்கடலில் ... ஹவுதிகளின் ... பற்றி எரி...

(ஏமன்) ••••••••••••••

ஏமன் அருகே செங்கடலி...
கொண்டிருந்த சரக்குக் க...
துப்பாக்கிச்சூடு மற்றும் ...
குண்டுகளை வீசி ஹவுதி ...
திடீர் தாக்குதல் நடத்தியதி...
தீப்பற்றி எரிவதாக ...
தகவல்கள் தெரிவிக்கின்றன...



ய...
வர்...
பின்...
ஏம...
டாவி...
தொ...
க...
செ...
மீது...
சியா...
முத...
லை...
மேஅ...

## பிரிக்ஸ் அமைப்புடன் இணைந்து செயற்படும் நாடுகளிற்கு எதிராக மேலும் பத்துவீத வரி

## ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு

(வோஷிங்டன்)

பிரிக்ஸ் நாடுகளின் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கைகளுடன் தங்களை இணைத்துக் கொள்ளும் நாடுகளுக்கு கூடுதலாக 10 வீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் இது குறித்து மேலதிகமாக எந்த விளக்கத்தையும் வெளியிடவில்லை.

பிரிக்ஸ் அமைப்பின் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கைகளுடன் தங்களை இணைத்துக் கொள்ளும் எந்தவொரு நாட்டிற்கும் கூடுதலாக 10 வீத வரி விதிக்கப்படும்.


இந்தக் கொள்கைக்கு எந்த விதிவிலக்கும் இருக்காது" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ம் மீண்டும் பதற்றம்!
## ...ன் தாக்குதல்களில்
## ...ரியும் கப்பல்!

**...லில் சென்று ... கப்பல் மீது ...ம் கையெறி ...தி படையினர் ...பதில் கப்பல் ... சர்வதேச ...றன.**




யுனைடெட் கிங்டம் கடல்சார் வர்த்தக நடவடிக்கைகள் அமைப்பின் கூற்றுப்படி, இந்த சம்பவம் ஏமன் துறைமுகமான ஹொடைடாவிலிருந்து தென்மேற்கே 94 கிமீ தொலைவில் நடந்தது.

கடந்த டிசம்பர் மாதத்திற்குப் பிறகு செங்கடல் கப்பல் போக்குவரத்து மீது ஏமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் இந்த வருடம் நடத்திய முதல் தாக்குதல் இதுவாகும் லைபீரியாவில் பதிவுசெய்யப்பட்ட மேஜிக் சீஸ் என்ற சரக்குக் கப்பலை ட்ரோன் படகுகள், ரொக்கெட் மூலம் இயக்கப்படும் கையெறி குண்டுகள் மற்றும் சிறிய ஆயுதங்களுடன் தாக்கினர்.

அந்தக் கப்பல் தற்போது தீப்பிடித்து எரிகிறது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நடந்து வரும் போரில் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக இந்தத் தாக்குதலுக்கு ஹவுதிகள் உரிமை கோரியுள்ளனர்.

பிரிட்டிஷ் இராணுவத்தின் ஒரு பிரிவான UK கடல்சார் வர்த்தக நடவடிக்கைகள் கப்பலில் இருந்த பாதுகாப்பு குழு தாக்குதலின் போது திருப்பித் தாக்கியதாகவும், "தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருவதாக" உறுதிப்படுத்தியதாகவும் தெரிவித்தது. (நி)

ட்ரம்ப் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ட்ரூத் சோஷியல் பதிவில் தெரிவித்துள்ளார்.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் உச்சி மாநாட்டிற்காகபிரிக்ஸ் கூட்டமைப்பு கூடியிருக்கும் நிலையில் ட்ரம்பின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. (நி)




## அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்து விபத்து!

- 27 பேர் உயிரிழப்பு
- மீட்புப் பணிகள் துரிதம்
- பாகிஸ்தானில் துயரம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாட்டின் லாகூர் மாகாணம் பாக்தாதி நகரில் 5 அடுக்குமாடிகளை கொண்ட குடியிருப்பு கடந்த சனிக்கிழமை அதிகாலை இடிந்து விபத்துக்குள்ளானது.

இந்த சம்பவம் குறித்து அறிந்த மீட்புக்குழுவினர் விரைந்து வந்து இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

சிலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனாலும், இந்த விபத்தில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி 9 பெண்கள் உட்பட 27 பேர் உயிரிழந்தனர்.

மேலும், இந்த விபத்தில் சிலர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும்பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. (நி)

## ட்ரம்பிற்கு எதிராக கட்சி ஆரம்பித்தார் மஸ்க்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பெரிய அழகிய மசோதா எனப்படும் அரசின் செலவின மசோதாவுக்கு ஒப்புதல் அளித்த நிலையில், அதை எதிர்த்து வந்த தொழிலதிபர் எலான் மஸ்க், அமெரிக்கா கட்சி என்ற புதிய கட்சியை தொடங்கியதாக நேற்று முன்தினம் அறிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் தீவிர ஆதரவாளராக இருந்தவர் தொழிலதிபர் எலான் மஸ்க். இந்தாண்டு ஜனவரியில் ட்ரம்ப் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதும் எலான் மஸ்க்கை அரசின் செயற்திறன் துறையின் தலைவராக நியமித்தார்.

அரசின் தேவையற்ற செலவுகளை குறைப்பதே இத்துறையின் நோக்கம்.

இந்நிலையில், ஜனாதிபதி ட்ரம்ப் பெரிய அழகிய வரி என்ற மசோதாவை அறிமுகப்படுத்தினார். இதில் மக்களுக்கான வருமான வரி, தொழில் வரி குறைப்பு, மின்சார கார்களுக்கான சலுகை நீக்கம் போன்ற அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. அரசின் கடன் உச்சவரம்பை உயர்த்த அனுமதிக்கும் சட்டப்பிரிவும் இருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அரசின் செயற்திறன் துறை தலைவர் பதவியை எலான் மஸ்க் இராஜினாமா செய்தார்.

தற்போது இந்த மசோதா அமெரிக்க பாராளுமன்றில் நிறைவேறியது. ஜனாதிபதி ட்ரம்பும் ஒப்புதல் வழங்கினார்.

இதனால் தன் சவாலை நிறைவேற்ற புதிய கட்சி தொடங்கி உள்ளார் எலான் மஸ்க். முன்னதாக இது குறித்து, சமூக வலைதளத்தில் மக்களிடம் அவர் கருத்து கேட்டார்.

இதைத் தொடர்ந்து அவர் வெளியிட்ட பதிவில், "மூன்றில் இரண்டு பங்கினர் புதிய அரசியல் கட்சியை விரும்புகிறீர்கள். அது உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும்.

நம் நாட்டை வீண்செலவு மற்றும் ஊழல் மூலம் திவாலாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

உங்கள் சுதந்திரத்தை உங்களுக்குத் திரும்பக் கொடுக்க அமெரிக்கக் கட்சி உருவாக்கப்பட்டது" என, தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலவு செய்த பணத்தை மீள ஒப்படையுங்கள்

## அதானி நிறுவனம் கோரிக்கை

(கொழும்பு)

அதானி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை கைவிட்ட அரசாங்கம். இப்போது அந்த நிறுவனத்தால் ஆரம்பத்தில் செலவழிக்கப்பட்ட சில மில்லியன் அமெரிக்க டொலர்களை திருப்பிச் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தீவு நாட்டுடனான இரண்டு முன்மொழியப்பட்ட காற்றாலை மின் திட்டங்களிலிருந்து விலகுவதாக இந்தியாவின் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் இலங்கை அரசாங்கத்திற்கு முன்னதாகத் தெரிவித்திருந்தது. தேசிய மக்கள் சக்தி தலைமையிலான புதிய அரசாங்கத்தின் கீழ். உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் விலையைக் குறைக்க இலங்கை முயன்றதை அடுத்து. நிறுவனம் அந்த முடிவை எடுத்தது.

அதானியுடன் இந்தத் திட்டத்தை மேற்கொண்ட கடந்த அரசாங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட செலவை அரசாங்கம் ஏற்கவில்லை.

வடக்கு மாகாணத்தில் உள்ள மன்னார் மற்றும் பூநகரி நகரங்களில் 442 மில்லியன் டொலர்களை முதலீடு செய்து. காற்றாலை மின் நிலையத் திட்டத்தை இந்த நிறுவனம் நிர்மாணிக்கவிருந்தது. இந்தத் திட்டம் 2025 ஆம் ஆண்டுக்குள் தேசிய மின் கட்டமைப்பில் குறைந்தது 350 மெகாவாட் மின்சாரத்தைச் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த ஆண்டு மே மாதம். நிறுவன அதிகாரிகள். இலங்கையில் நிலையான எரிசக்தி ஆணையத்துடன் இணைந்து ஆராய்ச்சி மற்றும் விசாரணைக்காக ஆரம்பத்தில் செய்த செலவுகளைத் திருப்பிச் செலுத்துமாறு அரசாங்க அதிகாரிகளுக்கு ஒரு கடிதம் அனுப்பினர்.

இருப்பினும். SEA-க்கு செலுத்தப்பட்ட 3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உட்பட அனைத்து செலவுகளையும் உள்ளடக்கிய மதிப்பீடு செய்யப்பட வேண்டிய சரியான தொகையை நிறுவனம் இன்னும் குறிப்பிடவில்லை.

திருப்பிச் செலுத்துவது குறித்து மின் மற்றும் எரிசக்தி அமைச்சு இன்னும் எந்த முடிவையும் எடுக்கவில்லை.

தற்போதைய நிலை குறித்து கேட்ட போது. இது தொடர்பாக சட்ட ஆலோசனை பெறப்படும் என்று மின்சக்தி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளதாகவும் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏதேனும் பணம் செலுத்தப்பட வேண்டியிருந்தால். அது அமைச்சரவை ஒப்புதல் மூலம் மட்டுமே இறுதி செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1986- இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MSc,DO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15785

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்:ரேவதி
12இல் செவ்
கி-பா:24 3/4
உயரம்:5'8"
தகைமை/தொழில்-A/L, Cleark
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்
தொ.இ: B/15787

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி-பா-56 1/2
உயரம் :5'7"
தகைமை/தொழில்: Software Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15788

பிறப்பு: 1985-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி-பா-24
உயரம்:6"
தகைமை/தொழில்-PHD,Reseacher (Australia)
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/15789

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி-பா- 30 3/4
2இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: Dip in Agriculture, London
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15793

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997 - இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்: HNDE, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/1528

பிறப்பு -1991 - இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
1இல்செவ்
கி.பா: 32 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில் -BSc, Production Manager(London)
எதிர்பார்ப்பு :- உயர்பதவி
தொ.இ: G/15291

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்-மூலம் 7 இல்செவ்
கி-பா-15 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: CIMA,Senior Manager (pvt)
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15506

பிறப்பு-1989-RC
நட்சத்திரம்-மிருகசீரிடம்
கி-பா-65
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L , Cleark
எதிர்பார்ப்பு: வெளிநாடு. அரச உத்தியோகம்
தொ.இ: B/15679

பிறப்பு-1993-RC
நட்சத்திரம்-உத்தரம்
உயரம் -5'3"
தகைமை/தொழில்: BFA, DO
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15669

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் ம[illegible]


# இன்று ஒரு தகவல் 409



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# எது சொந்தம்?

அவசரமாக ஓடிப்போய் ஒரு பேருந்திலே ஏறி உள்ளே ஒரு சீற்றைப் பிடித்து உட்கார்ந்தார் ஒருத்தர். அது ஒரு டவுன்பஸ். கண்டக்டர் பின்னால் இருந்தார். அதனாலே எழுந்து போய் அவரிடம் ஒரு ரூபா கொடுத்து ஒரு டிக்கெட் வாங்கிக்கொண்டு திரும்பி வந்தார். ஏற்கனவே இவர் உட்கார்ந்திருந்த இடத்திலே வேறு ஒருவர் உட்கார வந்தார்.

சார்... சார்... அது என் இடம்! என்று சொல்லிக்கொண்டே ஓடிப்போய், இவர் தன்னுடைய பழைய இடத்தில் மறுபடியும் உட்கார்ந்து விட்டார். இது நாம் தினசரி பார்க்கின்ற ஒரு காட்சி தான்.

பத்து நிமிடம் பிரயாணம் செய்வதற்குள்ளேயே அந்த சீற்றை நமக்குச் சொந்தம் என்று நினைத்து விடுகின்றோம். பல நாள் வாழ வேண்டிய வாழ்க்கை இது...

அதனாலே பார்க்கறதையெல்லாம் நமக்குச் சொந்தம் என்று நினைக்கின்றான் பாமர மனிதன். ஒரு பெரிய துறவி. அவர் ஒரு அரண்மனைக்கு வந்து ராஜாவைப் பார்த்தார்.

என்ன வேண்டும்? என்று கேட்டார் ராஜா. பயணிகள் தங்குகின்ற இந்த இடத்திலே தூங்குவதற்கு கொஞ்சம் இடம் வேண்டும் என்றார் துறவி. ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது. இது என்னுடைய அரண்மனை. இது பயணிகள் தங்கும் விடுதி இல்லை என்றார் ராஜா. அந்தத் துறவி இப்போது ராஜாவைப் பார்த்துக் கேட்டார். உங்களுக்கு முன்னால் இது யாருக்குச் சொந்தம்? என்றார்.

இது என் தந்தையுடையது என்றார். அவர் இப்போது எங்கே? என்றார். அவர் இப்போது இல்லை. இறந்துவிட்டார் என்றார் ராஜா. சரி அவருக்கு முன்னால் இது யாருக்குச் சொந்தம்? என்றார். அவருக்கு முன்னால் இது என் பாட்டனாருக்குச் சொந்தம் என்றார். அவர் எங்கே? என்றார். அவரும் இப்போது இல்லை என்றார்.

அவர்கள் எல்லாம் இங்கே கொஞ்சக் காலம் தங்கி இருந்து விட்டுப் போய்விட்டார்கள் அவ்வளவுதான். அப்படி இருக்கிறப்போ இது பயணிகள் தங்கும் இடம் இல்லாமல் வேறு என்ன? என்று கேட்டார் துறவி. ராஜா யோசித்தார்.

புறப்படுவதற்கு முன்னால் கொஞ்சக் காலம் தங்கிவிட்டுப் போற இடம் தான் இது என்பதைப் புரிந்து கொண்டார். இப்படித் தான் இன்றைக்குப் பலபேர். சொந்தமில்லாததையெல்லாம் சொந்தம் என்று நினைத்துக்கொண்டு சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இராம கிருஷ்ண பரமஹம்ஸனார், ஒரு கதை சொல்லியிருக்கின்றார். அது என்னவென்றால், கடவுள் இரண்டு சமயங்களிலே சிரிக்கின்றாராம்.

ஒரு சமயம் எப்படி என்றால், ஒரு மருத்துவர் ஒரு நோயாளியிடம் பயப்படாதே. நான் உன்னைக் காப்பாற்றி விடுகின்றேன் என்று சொல்லும் போது சிரிப்பாராம்.. நாம் இந்த ஆள் வாழ்க்கையை முடிக்கத் திட்டம் போடுகின்றோம். இவன் அவனைக் காப்பாற்ற நினைக்கின்றானே என்று நினைச்சி சிரிப்பாராம்.

கடவுளுக்குச் சிரிப்பு வரும் இன்னொரு சந்தர்ப்பம் என்னவென்றால், அண்ணனும் தம்பியும், அப்பா விட்டுட்டுப்போன நிலத்தை இரண்டாகப் பிரித்து, நடுவிலே கோடு போட்டு, கோட்டுக்கு இந்தப் பக்கம் என்னுடையது. அந்தப் பக்கம் உன்னுடையது என்று சொல்லிக் கொண்டிருக்கின்றபோது கடவுளுக்கு சிரிப்பு வருமாம்! அவர் நினைப்பாராம்.. "இந்த இடம் முழுவதும் என்னுடையது என்று இருக்கிறப்போ இந்த இரண்டு பேரும் என்னுடையது, உன்னுடையது என்று உரிமை கொண்டாடுகின்றார்களே என்று நினைத்து சிரிப்பாராம்.

யோசிச்சிப் பார்த்தால், நியாயமாகத்தான் தெரிகிறது. இருக்கிறதையெல்லாம் சொந்தமாக்கிக்கொண்டு அதை பாதுகாப்பது எப்படி என்பதிலேயே நம் காலம் எல்லாம் கழிந்து விடுகின்றது.

நம்ம ஆசாமி ஒருத்தன். ஊரிலே பெரிதாக ஒரு வீடு கட்டினான். ஒருநாள், அவன் பட்டணத்துக்கு வந்தான். திடீரென்றுபுயல், மழை, வெள்ளம் என்று ஊரிலிருந்து செய்தி வந்தது.

உன்னுடைய வீடு வெள்ளத்திலே அடித்துக் கொண்டு போய் விட்டதாம் என்று சொன்னார்கள். இவன் கவலைப்படவில்லை. இருக்கவே இருக்காது. என்னுடைய வீட்டுக்கு எந்த ஆபத்தும் வந்திருக்காது என்றான். எப்படி அவ்வளவு உறுதியாக சொல்கின்றாய் என்று கேட்டார்கள். வரும்போதே அதை பத்திரமாக பூட்டிவிட்டுத் தான், வந்திருக்கின்றேன். சாவிகூட இதோ என்னிடம் இருக்கின்றது என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநீதியாக காணி கையகப்படுத்தல் அரசாங்கம் துணை போக மாட்டாது

## ஜெகதீஸ்வரன் எம்.பி



(வவுனியா)

அநீதியான முறையில் காணிகளை கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் துணை போக மாட்டாது எனவும் வவுனியா வடக்கு, வெடிவைத்தகல்லு காடழிப்பு தொடர்பில் விசாரணை நடத்தி ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும், சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் பணிப்புரை வழங்கியுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார். வவுனியாவில் உள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவில் உள்ள வெடிவைத்தகல்லு கிராம அலுவலர் பிரிவில் உள்ள திரிவைத்தகுளம் என்ற பகுதியில் திட்டமிடப்பட்ட காடழிப்பு இடம் பெறுகின்றது என்ற முறைப்பாட்டுக்கு அமைய நாம் நேரடியாக கலாபோகஸ்வேவ பொலிஸார், வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் அகிலன் உள்ளிட்ட குழுவினர் நேரடியாக சென்று பார்வையிட்டோம்.

பாரியளவில் திட்டமிடப்பட்ட வகையில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 35 - 40 ஏக்கர் காடு முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. மகாவலி எல் வலய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர்களால் இது தொடர்பில் எந்தவித அனுமதியும் எவருக்கும் வழங்கவில்லை எனத் தெரிவித்தனர்.

அவர்களுக்கும் முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் இது தொடர்பில் பொலிஸாருக்கு முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

வனவளத் திணைக்களத் திடம் கேட்ட போது அவர்களும் அனுமதி வழங்கவில்லை என்றனர். வனவளத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையினர் இணைந்து இது தொடர்பாக பரிசோதனை நடத்தவுள்ளனர்.


ஒரு வாரத்திற்குள் இது தொடர்பான ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறும், அதனுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனையை பெற்றுக் கொடுக்குமாறும் பணிப்புரை வழங்கியுள்ளேன்.

இது தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபர் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். பாரிய மரங்கள் அழிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகளை எடுக்குமாறு அரச அதிகாரிகளிடம் பணிப்புரை வழங்கியுள்ளோம்.

இங்கு இடம்பெற்ற முறைகேடான செயற்பாட்டுக்கு விரைவாக தீர்வு வழங்கவுள்ளோம். இதனை பாராளுமன்றக் கூட்டத்திலும் தெரியப்படுத்தி வன வளத்துறை அமைச்சரிடம் நேரடியாக சமர்பித்து விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கோருவோம்.

மக்களுடைய காணிகள் எதுவாக இருந்தாலும் இவ்வாறு அநீதியான முறையில் கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் துணைபோக மாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார். (8-250)

# மன்னாரில் 20 மில்லியன் ரூபா மதிப்புள்ள கேரள கஞ்சா மீட்பு



(மன்னார்)

இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி மன்னாரில் 20 மில்லியன் பெறுமதியான கேரளக் கஞ்சாப் பொதிகள் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

மன்னாரில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் குற்றப் புலனாய்வுப் பிரிவு நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின் போது தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நடுக்குடா கடற்கரைக்கு அருகிலுள்ள 30ஆவது காற்றாலை கோபுரத்திற்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 20 மில்லியன் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்த கேரளக் கஞ்சா பொதிகள் இந்தியாவிலிருந்து கடல் வழியாக கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


இந்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-285)



புல்லாவெளி புனித செபஸ்தியார் திருத்தலத்தின் குருநகர் பங்கு மக்களால் சிறப்பிக்கப்படும் ஆடிமாத திருவிழா நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான பக்தர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக இடம்பெற்றது. (படம்: தேவானந்தன்)

# தருமபுரம் பகுதியில் இரவு வேளைகளில் மரக்கடத்தல்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள பொது மயானத்தில் கடந்த சில தினங்களாக பெறுமதி மிக்க மரங்கள், அனுமதி இன்றி சட்ட விரோதமான முறையில் வெட்டி கடத்திச் செல்லப்படுகின்றது.

அது மட்டுமின்றி கிராமங்களிலும் மக்கள் குடியிருப்பு பகுதிகளிலும் வீடுகளில் இல்லாதவர்களின் காணிகளிலும் இரவு வேளைகளில் மரங்களை சட்டவிரோதமான முறையில் வெட்டி செல்கின்றனர்.

அத்துடன் தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள இறந்தவர்களை புதைக்கும் இடத்தில் உள்ள கல்லறைகளும் உடைக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-316)

# 'நீதம்' சட்ட இதழின் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் யாழ் பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் இணைந்து முன்னெடுக்கும் நீதம் சட்ட இதழின் வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ் பல்கலைக்கழக கைலாசாபதி கலையரங்கில் நடை பெறவுள்ளது .

இந் நிகழ்வில் உயர்நீதி மன்ற நீதியரசர் குமுதினி விக்கிரமசிங்கே பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணம் சிவில் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் கௌரவ விருந்தினராகவும் பங்கேற்கவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பலகலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத் துறை தலைவர் கோசலை மதன் உள்ளிட்ட பலரும் பங்கேற்கவுள்ளனர். யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்களால் ஒவ்வொரு ஆண்டும் நீதம் இதழ் வெளியிடப்பட்டு வருவதுடன் இம் முறை ஒன்பதாவது தடவையாக வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-331)


# 5ம் ஆண்டு நினைவஞ்சலி

18 · 03 · 1946



03 · 07 · 2020

எமது அன்புத்தெய்வம்

அமரர் கந்தையா கனகசபை

( ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்- இலங்கை வங்கி )

திதி 08.07.2025 ( செவ்வாய்க்கிழமை )

மீளாத்துயில் கொண்டு நான்காண்டு கடந்தாலும்
ஆறவில்லை எம் மனது
தீராத்துயரில் தவிக்கின்றோம் நாம் இங்கு
பாராட்டி சீராட்டி பாசமாய் வளர்த்தீரே பாதி வழியில்- எம்மை
பரிதவிக்க விட்டு விட்டுச் சென்றதென்ன, குடும்பத்தின் ஆணிவேராய்
வழிகாட்டி வாழ்ந்தவரே- நீங்கள்
நீறாகிப்போனாலும் உங்கள் வழித்தடத்திலேயே- நாம்
என்றென்றும் தொடர்ந்திடுவோம் இன்னும் ஆண்டாண்டு காலம்
கடந்தோடிப்போனாலும்- உங்கள் புன்னகை பூத்த முகம்- எங்கள்
நெஞ்சோடு வாழ்ந்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

(1305)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 815





ஒரு குதிரை அதிவேகமாக வந்தது. கூட்டத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் புகுந்து பாய்ந்து வந்தது. குதிரையின் காலடியில் சிக்கிக் கொள்ளாமலிருக்கும்படி ஜனங்கள் இருபுறமும் நெருக்கியடித்துக் கொண்டு நகர்ந்து கொண்டு வழிவிட்டார்கள். "இளஞ் சம்புவரையன்!" என்று கத்தினார்கள்.

ஆம், வந்தவன் கந்தமாறன் தான்! கூட்டத்திலிருந்தவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் கந்தமாறன் வேகமாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டு போய்க் கோட்டை வாசல் அருகில் நிறுத்திவிட்டுக் கீழே குதித்தான். அங்கே நின்று கொண்டிருந்த சம்புவரையரையும் பழுவேட்டரையரையும் பார்த்து வணங்கிவிட்டு, "இளவரசர் வருகிறார் ஆனால் சித்தம் அவ்வளவு சுவாதீனத்தில் இல்லை. திடீர் திடீர் என்று கோபம் வருகிறது.

முன்னெச்சரிக்கை செய்வதற்காகவே வந்தேன். நல்லபடியாக இராஜோபசாரம் செய்து வரவேற்க வேண்டும். அவர் ஏதாவது தாறுமாறாகப் பேசினாலும் பதில் சொல்லாமலிருப்பது நல்லது!" என்றான்.

இவ் விதம் கூறி விட்டு அங்கே நிற்காமல் மேலே அண்ணாந்து பார்த்தான். முன் வாசல் கோபுரத்தின் மேல் மாடியில் அரண்மனைப்பெண்கள் காத்திருப்பது தெரிந்தது.

உடனே கோட்டை வாசலில் புகுந்து உள்ளே சென்று, அங்கே ஒரு பக்கம் இருந்த மச்சுப் படிகளின் வழியாக மேலே ஏறிச் சென்றான்.

பெண்கள் இருக்குமிடத்தை அடைந்ததும் கந்தமாறனுடைய கண்கள் மற்றவர்களைப் பொருட்படுத்தாமல் நந்தினி தேவி இருக்குமிடத்தைத் தேடிக் கண்டுபிடித்தன. அவள் அருகில் சென்று, "தேவி! தங்கள் விருப்பத்தை நிறைவேற்றினேன்.

இளவரசரை அழைத்து வந்தேன், அதோ வந்து கொண்டிருக்கிறார். ஆனால் மதம் பிடித்த யானையைப் போல் இருக்கிறார். அவரை எப்படிச் சமாளிக்கப் போகிறோமோ, தெரியவில்லை!" என்றான்.


"ஐயா! அதைப்பற்றி என்ன கவலை? மதம் பிடித்த யானையை அடக்கி ஆள்வதற்குத் தங்கள் சகோதரியின் இரு கண்களாகிய அங்குசங்கள் இருக்கின்றன!" என்றாள் நந்தினி. மணிமேகலை, "அக்கா! இது என்ன பேச்சு!" என்றாள். கந்தமாறன், "மணிமேகலை! பழுவூர் ராணி கூறுவதில் தவறு ஒன்று மில்லையே! ஆதித்த கரிகாலரைப் போன்ற வீராதி வீரரைப் பதியாகப் பெறத் தவம் செய்ய வேண்டாமா?" என்றான்.

மணிமேகலை பதில் சொல்வதற்குள் நந்தினி குறுக்கிட்டு, "ஐயா! இளவரசருடன் இன்னும் யாரேனும் வருகிறார்களா?" என்று கேட்டாள்.

"ஆம், ஆம்! பார்த்திபேந்திர பல்லவனும், வந்தியத்தேவனும் வருகிறார்கள்" நந்தினி மணிமேகலையைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு "எந்த வந்தியத்தேவன்? தங்களுடைய சிநேகிதன் என்று சொன்னீர்கள், அவனா?" என்றாள்.

"ஆம், என்னைப் பின்னாலிருந்து குத்திக் கொல்லப் பார்த்த அந்தப் பரம சிநேகிதன்தான். அவன் எங்கிருந்தோ, எப்படியோ வந்து குதித்து வெள்ளாற்றங்கரையில் எங்களோடு சேர்ந்து கொண்டான். இளவரசருடைய தாட்சண்யத்துக்காகப் பார்த்தேன் இல்லாவிடில் அங்கேயே அவனை என் கத்திக்கு இரையாக்கியிருப்பேன்!" என்றான்.

(தொடரும்...)




## மாசிலாபுரத்து கிணற்று நீர்



(நேற்றைய தொடர்ச்சி)

அவ்வளவு தூரம் அம்மாவையும், அப்பாவையும் விட்டு போறியா?

அம்மா, அம்மா போய் ஆறு மாதத்தில் திரும்பி வந்துடுவேன்.

எப்படி அவ்வளவு தூரம் போவீர்கள் குதிரை வண்டியிலயா?

பையன் சிரி சிரி என்று சிரிக்கிறான், அம்மா "இன்னும் இந்த கிணற்றுத் தவளையாகவே இருக்கிறியே கடல் தாண்டி போக வேண்டும்.

ஐயோ கடலா அது எப்படி இருக்கும்? மறுபடி சிரித்து விட்டு அம்மா நிறைய தண்ணீரும் பெரிதாகவும் ரொம்ப பெரிசா இருக்கும்.

அப்ப இதை விட பெரிய கிணறாக இருக்குமா?மறுபடி சிரிக்கிறான், அம்மா இந்த கிணறு எல்லாம் கடலில் உள்ள ஒரு துளி கூட இல்லை. அப்படியென்றால் அதில எப்படிப் போவாய் ? கப்பலில் போவேன் அம்மா என்றான் அது எப்படி இருக்கும்?

அதுவும் பெரிசா இருக்கும்.. சரி சரி எப்படியோ பத்திரமா போய்விட்டு திரும்பி வந்து சேரு என்று சொல்லிக் கொண்டே அம்மா தண்ணீர் நிரம்பிய குடத்தை தூக்கிக் கொண்டாள்.

இதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கிணற்றுக்கு தாங்க முடியாத கோபம் வந்து விட்டது.

இந்த ஊருக்கே தண்ணீர் கொடுத்துக் கொண்டு இருக்கேன் என்னைப் போய் கேவலமாகப் பேசிட்டானே இந்தத் தம்பி. பார்க்கலாம் நானும் அந்தக் கடலைப் பார்க்க வேண்டும். பார்க்கலாம் அது என்னை விடப் பெரிதா? இல்லை நான் பெரிதா என்று.

இப்படி நினைத்துக் கொண்டாலும், எப்படிக் கடலை பார்ப்பது என்று ஒரே சிந்தனையாக போய்விட்டது, அந்த கிணற்றுக்கு. இதை நினைத்து நினைத்து கிணற்றுக்கு தண்ணீர் கூட கொஞ்சம் வற்றி விட்டது.

என்ன கிணற்றில தண்ணி வற்றிய மாதிரி இருக்கு? என்று ஊர் மக்கள் இரண்டு நாட்களிலேயே பேசிக் கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

கிணற்றுக்கோ எப்படியும் கடலைப் பார்த்தே தீரவேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது. கணபதியப்பனின் மணைவி நான்கு நாட்கள் கழித்து மீண்டும் தண்ணீர் எடுக்க வந்தாள்.

அங்குள்ள பெண்கள் கேட்டார்கள், பையன் கிளம்பி விட்டானா என்று.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் உங்களால் சாதிக்க முடியும் என்று நம்புங்கள். இறைவன் நமது பக்கம் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். – சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## திருச்செந்தூர் முருகனுக்கு தமிழில் நடந்த குடமுழுக்கு

ஆறுபடை வீடுகளில் ஒன்றாக இருக்கக் கூடிய திருச்செந்தூர் முருகனுக்கு நேற்று (07.07.2025) குடமுழுக்கு நடைபெற்றது.

குடமுழுக்கு நடைபெற்றதென்பது ஆச்சரியமான செய்தியல்ல.

மாறாக, குடமுழுக்கு தமிழில் நடைபெற்றது என்பதுதான் ஆச்சரியமும் ஆனந்தமுமான செய்தி.

ஆம், திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் 16 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றைய தினம் நடைபெற்ற குடமுழுக்கு தமிழில் நடைபெற்றது.

இதன்போது தமிழகத்திலுள்ள ஆதீன முதல்வர்கள் அங்கு பிரசன்னமாகி இருந்தனர்.

பொதுவில் வரலாற்றுச் சிறப்புமிக்க சைவாலயங்களில் சமஸ்கிருதத்திலேயே கிரியைகள் இடம்பெறுகின்றன.

தமிழில் பூசை வழிபாடுகள் இடம்பெற வேண்டுமென்ற கருத்தை தமிழகத்திலுள்ள அறிஞர் பெருமக்கள் வலியுறுத்தி வந்தனராயினும் அவை அமுலுக்கு வருவதில் பெரும் இடர்பாட்டை எதிர்கொள்கின்றன.

இந்நிலையில் உலகம் முழுமையிலும் பல கோடி அடியார்களைக் கொண்ட திருச்செந்தூர் முருகனுக்கு நேற்று தமிழில் குடமுழுக்கு இடம்பெற்றிருப்பது ஒரு பெரும் திருப்புமுனை எனலாம்.

ஆம், வரலாற்றுச் சிறப்புமிக்க – ஆறுபடை வீடுகளில் முதன்மையானது எனப் போற்றப்படுகின்ற திருச்செந்தூர் முருகனுக்குத் தமிழால் அர்ச்சனை செய்து; திருக்குடமுழுக்கு இடம்பெற்றிருக்கும்போது, அதனை ஏனைய ஆலயங்கள் பின்தொடர்வதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

அதேவேளை சமஸ்கிருதத்திலிருந்து விலகித் தமிழில் பூசை வழிபாடுகளைச் செய்வதிலிருந்த தயக்கத்தை திருச்செந்தூர் முருகனுக்குத் தமிழில் நடந்த திருக்குடமுழுக்கு ஆற்றுப்படுத்தியுள்ளது.

ஆம், தமிழ்க் கடவுளாகிய முருகனுக்குத் தமிழில் மந்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, திருமுறைகள் ஓதப்பட்டு திருக்குடமுழுக்கு நடந்திருப்பதன் மூலம், எங்கள் தமிழ்மொழி வழிபாட்டு மொழியாகப் பிரகடனமாகியுள்ளதென்பது மிகுந்த மகிழ்வைத் தருவதாகும்.

இதை நாம் கூறுவதற்காக, சமஸ்கிருதத்துக்கு எதிரான கருத்தியலை நாம் கொண்டிருப்பதாக யாரும் கருதிவிடக்கூடாது.

மாறாக, பக்தி மொழியாகிய எம் தமிழால் கந்தப் பெருமானை வந்தனை செய்து அவனை ஆவாகனப்படுத்துவதென்பது தமிழின் மகிமையை மேலும் போற்றுவதாகும் என்பது இங்கு புரிதற்குரியது.

### முல்லையில் இராணுவம் விடுவித்த

# குளங்களைக் கையகப்படுத்தும் வனவளத் திணைக்களம்

### ரவிகரன் எம்.பி காட்டம்

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையப்பிரிவிலுள்ள ஏகம்பைக்குளம் மற்றும் பிராமணகுளம் என்பவற்றை இராணுவம் விடுவிக்கும் நிலையில் அவற்றை வனவளத்திணைக்களத்தினர் ஆக்கிரமிக்க நடவடிக்கை மேற்கொள்கின்றனர் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த குளங்கள் இரண்டும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த நிலையில் தற்போது அப்பகுதியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி வருகின்றனர்.

இத்தகைய சூழலிலேயே குறித்த பகுதியை வனவளத் திணைக்களத்தினர் ஆக்கிரமிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே இந்தச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தி குளங்களை விடுவிப்புச்செய்து மக்களின் விவசாயப் பயன்பாட்டுக்கு அவற்றை வழங்குவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ந-7)

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியா சூடுவெந்தபுலவு, மினாநகர் மக்கள் தமது பிரதேசத்துக்கான பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மினாநகர் பிரதான வீதியானது நெளுக்குளம் - நேரியகுளம் வீதிச் சந்தியில் குறித்த கவனயீர்ப்புப் போராட்டமானது நேற்று இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

சூடுவெந்தபுலவு, மினாநகர் கிராமமானது 2013 ஆம் ஆண்டு குடியேற்றம் செய்யப்பட்ட கிராமம் ஆகும். இக்கிராமத்தின் பிரதான வீதியானது 12 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளது. தினசரி கல்குவாரி டிப்பர் வாகனம் செல்வதால் கிராமத்தின் பிரதான வீதியானது சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இங்கு சுமார் 200க்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருவதுடன் தினமும் 50 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் என இவ் வீதியால் பயணிக்கின்றனர்.

வீதி சீரின்மையால் அண்மையில் ஒரு மாணவன் விபத்துக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே, எங்களுக்கு இந்த வீதி தொடர்பான தெளிவினை ஏற்படுத்தி வீதியினைச் சிறப்பான முறையில் அமைத்துத் தந்து கல்குவாரி செல்லும் கனரக வாகனங்களுக்கு வேறு பாதை அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவித்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு வருகை தந்த ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முத்து முகமது, செட்டிகுளம் பிரதேச சபை தவிசாளர் இம்தியாஸ் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மக்களது கோரிக்கைகளை கேட்டறிந்ததுடன் செட்டிகுளம் பிரதேச சபை ஊடாக குறித்த வீதியைப் புனரமைத்துத் தருவதாகவும் கல்குவாரி தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர். (ந-7,250)

### முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான்

# தான்தோன்றீஸ்வரரின் சப்பைரதோற்சவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வராலய மகோற்சவப் பெருவிழா கடந்த 25ம் திகதி முதல் பிரமாண்டமாக இடம்பெற்று வரும் நிலையில் இன்று சப்பைரதோற்சவம் இடம்பெறவுள்ளது.

விசேட வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து இரவு 9.00 மணியளவில் எம் பெருமான் அழகிய சப்பைரதந்தனில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். (ந-7,299)

### அரசியல் எதிரிகளைப் பழிவாங்கவே

# சி.ஐ.டியின் பணிப்பாளராக ஷானி அபேசேகர நியமனம்

### அரசைச் சாடிய பொதுஜன பெரமுன

தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கவும் தனக்கு எதிராகச் செயற்படுபவர்களை ஒடுக்கவுமே அநுர அரசு ஷானி அபேசேகரவைக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமித்துள்ளது எனப் பொதுஜன பெரமுன பகிரங்கக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம்,

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்ற ஷானி அபேசேகர, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை பாரதூரமான விடயமாகும்.

ஜே.வி.பி அலுவலகத்தில் ஊடக சந்திப்பை நடத்தி அக்கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்ற ஷானி அபேசேகர குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது பாரதூரமான விடயமாகும். இதற்கு முன்னர் எந்தவொரு அரசும் இப்படிச் செயற்பட்டதில்லை. தமக்குத் தேவையான விதத்தில் சட்டத்தைச் செயற்படுத்தி அரசியல் எதிராளிகளைப் பழிவாங்கும்-ஒடுக்கும் நோக்கிலுமே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கட்சியாக இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம் என்றார். (ந-7)

# குற்றவாளிகளே சி.ஐ.டியின் பணிப்பாளரைக் கண்டு அஞ்சுகின்றனர்

### மொட்டுக்கு அரசு பதிலடி

(கொழும்பு)

குற்றப்புலனாய்வுப் பிரிவிற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பணிப்பாளரைக் கண்டு குற்றவாளிகளே நடுங்குகின்றனர் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஜே.வி.பி தலைமையகத்தில் ஊடக சந்திப்பை நடத்திய ஷானி அபேசேகர சி.ஐ.டி பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என மொட்டுக் கட்சித் தரப்பால் முன்வைக்கப்படும் கருத்துத் தொடர்பில் வினவிய போதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இன்று விமர்சனங்களை முன்வைக்கும் தரப்பினரே ஷானி அபேசேகரவின் விசாரணை நடவடிக்கைகளை முடக்கி அவரின் தொழில்சார் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தனர்.

ஷானி அபேசேகர திறமையான அதிகாரி, எனவே ஷானி அபேசேகர யார் என்பது மக்களுக்குத் தெரியும். நாட்டுக்காக உயிரைக்கூடத் துச்சம் எனக் கருதி செயற்படும் அதிகாரியை நாம் பாதுகாப்போம். குற்றச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்போது தமக்குப் பிரச்சினை வரும் எனக் கருதும் தரப்பினரே இப்படியான விமர்சனங்களை முன்வைக்கின்றனர் என்றார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 08

சொக்கன்

ஆனால் அவர் எங்கே இருக்கிறார் என்னவாக இருக்கிறார் என்கிற விவரம் கூடச் சிக்கவில்லை.

*1973* ஆம் ஆண்டு மத்தியில் அவர்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது. அபுஹாசன் நோர்வே நாட்டில் லில்லிஹாமர் என்ற ஊரில் இருக்கிறார்.

இந்த விபரத்தை யார் அனுப்பியது. நம்பகமான தகவல் தானா என்பதெல்லாம் மொசாட்டுக்குத் தெரியவில்லை. ஆனால் அபுஹாசன் விடயத்தில் எந்தச் சிறிய வாய்ப்பையும் அவர்கள் தவறவிடமுடியாது.

ஆகவே அவசரமாக ஒரு மொசாட் குழு திரட்டப்பட்டது. அவர்கள் கையில் அபுஹாசனின் புகைப்படத்தைக் கொடுத்து. இந்த ஆளைத் தேடிப் பிடித்து முடித்து விடுங்கள் என்று சொல்லி அனுப்பினார்கள்.

அவர்களுடைய அதிர்ஷ்டம் லில்லிஹாமர் அப்படியொன்றும் பெரிய ஊர் இல்லை அங்கே அபுஹாசனைத் தேடிக் கண்டுபிடிப்பது பெரிய சிரமமாக இருக்காது.

மொசாட் குழு வேலையில் இறங்கியது. அபுஹாசன் எங்கே இருக்கக்கூடும் என்பதுபற்றித் தகவல் திரட்ட ஆரம்பித்தார்கள் தெருவில் அகப்படுகிற முகங்களை உற்றுப் பார்த்துக் குறிப்பு எடுத்தார்கள்.

ஆனால் உண்மையில் அப்போது அபுஹாசன் நோர்வே நாட்டிலேயே இல்லை. இப்படி ஒரு பொய்யான தகவலைக் கொடுத்து மொசாட்டை அலைக்கழிக்க வேண்டும் என்று யாரோ திட்டம் போட்டிருக்கிறார்கள்.

இந்த விடயம் தெரியாமல் மொசாட் ஏஜென்ட்கள் லில்லிஹாமரைச் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அவசரத்துக்க ஓர் அப்பாவி மாட்டினான்.



அவர்கள் உடனடியாக மேலிடத்துக்குத் தகவல் அனுப்பினார்கள்.

அபுஹாசனைக் கண்டுபிடித்து விட்டோம் அடுத்து என்ன செய்வது? இதென்ன கேள்வி? சுட்டுத்தள்ளுங்கள்!

## பதுங்கிய புலி

ஏங்க இன்னிக்கு சினிமாவுக்குப் போலாமா?

இப்படி ஒரு மனைவி அதுவும் கர்ப்பமாக இருக்கிற மனைவி கேட்டால். எந்தக் கணவனால் மறுக்கமுடியும்? டபுள் ஓகே சொல்லி விட்டார் அஹ்மத் பௌச்சிகி.

அஹ்மத் மொராக் கோலைச் சேர்ந்தவர் இப்போது நோர்வே நாட்டின் லில்லிஹாமரில் செட்டிலாகியிருந் தார். அங்கே ஒரு ஹோட் டலில் சர்வர் உத்தியோ கம்.

அடிப்படையில் அஹ்மத் ரொம்ப அமைதியான மனிதர். அநாவசியமாக எந்த வம்புக்கும் போகமாட்டார். தான் உண்டு தன்னுடைய வேலை உண்டு என்றிருக்கிற சமர்த்துப் பேர்வழி.

*1973 ஜுலை 21 ஆம்* திகதி அவர் தன் மனைவியுடன் சினிமாவுக்குப் புறப்பட்டார். படம் முடிந்தபிறகு இருவரும் கலகலப்பாகப் பேசியபடி வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது திடீரென்று அவர்கள் முன்னால் ஒரு கார் வந்து நின்றது. ஆயுதம் தாங்கிய மொசாட் ஏஜென்ட்கள் அதிலிருந்து இறங்கினார்கள்.

அஹ்மதுக்கு எதுவும் புரியவில்லை என்ன நடக்கிறது? இவர்களெல்லாம் யார்? என்று அவர் குழம்பிக்கொண்டிருக்கும் போதே அவர்கள் சுட ஆரம்பித்தார்கள்.

சில விநாடிகள்தான் அவருடைய மனைவியின் கண்முன்னே அஹ்மதின் உயிர் பறிக்கப்பட்டு விட்டது. அவர் சுருண்டு விழுவதற்குள் வந்தவர்கள் காரில் ஏறித் தப்பித்துவிட்டார்கள்.

மொசாட்டைப் பொறுத்தவரை அவர்கள் அபுஹாசனைக் கொன்று விட்டதாக நினைத்துக் கொண்டிருந்தார்கள. திமிங்கிலம் பிடிபட்டு விட்டது ம்யூனிக் படுகொலைக்கான பழி வாங்குதல் இத்துடன் முடிந்தது.

ஆனால் அவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட அஹ்மத் பௌச்சிகிக்கும் அபுஹாசனுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. பார்ப்பதற்கு இருவரும் கிட்டத்தட்ட ஒரேமாதிரியாக இருக்கிறார்கள் என்பதைதவிர.

இந்த விடயம் வெளியே தெரிந்தபோது மொசாட் மேலிடம் வெலவெலத்துப்போனது. ஒரு தீவிரவாதியைக் கொல்வதற்குப் பதிலாக அப்பாவிப் பொதுமகன் ஒருவரைச் சுட்டுத் தள்ளியது மிகப் பெரிய குற்றம்.

சொல்லப்போனால் நிஜமான தீவிரவாதிகளைக் கூடக் கொலை செய்கிற உரிமை மொசாட்டுக்கு இல்லை. அவர்கள் என்ன தப்பு செய்திருந்தாலும் நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்து விசாரணை நடத்தித்தான் தண்டனை கொடுக்கவேண்டும் அதுதான் சட்டம்.

இதற்கு உள்ளூர் உதாரணம் வேண்டுமென்றால் சமீபத்திய மும்பை தாக்குதல் சம்பவங்களை எடுத்துக் கொள்ளலாம். அதை யார் செய்தார்கள் எப்படிச் செய்தார்கள் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரியும் போட்டோ வீடியோ ஆதாரங்கள்கூட இருக்கின்றன. போதாக் குறைக்கு அஜ்மல் கசாப் என்று ஒரு தீவிரவாதி உயிருடன் பிடிபட்டிருக்கிறார்.

ஆனால் இந்திய அரசாங்கமோ பொலிஸோ உளவுத் துறையோ அஜ்மலுக்குத் தண்டனைகொடுக்க முடியாது. அவர்மேல் சட்டப்படி வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள் அதை ஒரு நீதிபதி விசாரித்துத் தண்டனை தருவதுதான் முறை.

ம்யூனிக் விவகாரத்தில் இதுபோன்ற சட்டதிட்டங்களையெல்லாம் மொசாட் மதிக்கவில்லை. கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் அவ்வளவுதான்!

ஆனால் இப்போது அபுஹாசனுக்குப் பதிலாக யாருடைய கண்ணையோ குத்திவிட்டார்கள் மன்னிக்க முடியாத தவறு இது.

இந்த விவகாரத்தில் மொசாட் செய்த தவறுகள் ஒன்று இரண்டு இல்லை ஏழெட்டு வால் யூம்களில் எழுதி நிரப்பும் அளவுக்குப் பிரமாதமாகச் சொதப்பியிருந்தார்கள். முதலில் லில்லிஹா மர் மிகச் சிறிய நகரம் அங்கேயாருடைய கண்ணிலும் படாமல் தப்புச் செய்வது சிரமம்.

பெரிய நகரம் என்றால் எந்த மாபாதகமும் செய்துவிட்டுச் சட்டென்று காணாமல் போய்விடலாம். சிறிய ஊர்களில் அது முடியாது சுற்றி கவனித்துக் கொண்டே இருப்பார்கள். இப்படி ஒரு சூழ்நிலையில் ஒருவரை நடுத்தெருவில் சுட்டுத்தள்ளுவது சுத்தப் பைத்தியக்காரத்தனம். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழி உரிமை...

டும் போதாது. ஏட்டில் உள்ள உரிமைகள் மக்களின் வாழ்க்கையில் யதார்த்தமாக மாற வேண்டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அரச கரும மொழிகள் வாரத்தின் இறுதிநாள் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை (7) இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

மொழி என்பது ஒரு தொழில்நுட்ப விடயம் அல்ல என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதே போன்று தொடர்பு சாதனத்தைவிட அதிகமான தெளிவை மொழி உறுதிப்படுத்தப்படுகிறது. மொழி என்பது ஒரு நபரின் அடையாளத்தின் இதயம். அது நினைவின் குரலும் கூட. சிந்தனையின் கட்டமைப்பு.

ஒருவர் தனக்கு நெருக்கமான மொழியில் கருத்துத் தெரிவிக்க அல்லது செவிசாய்ப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்றால், அந்த சமூகத்தில் மனிதாபிமானம் நிராகரிக்கப்படுகிறது என்றே கூறவேண்டும். அதனாலே அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அல்லது போராட்ட கோஷங்கள் ஊடாக மாத்திரம் தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்த முடியாமல் இருக்கிறது. மொழிக் கொள்கையை செயற்படுத்துவதன் மூலமே இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுகிறது.

சமத்துவம் இல்லாமல் நீடித்த அமைதி இருக்க முடியாது. அரசு தனது மக்களின் மொழியை மதிக்கா விட்டால் சமத்துவம் ஏற்படப்போவதில்லை. நாங்கள் அதனைப் புரிந்து கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து அனைத்து கிராமசேவகர் பிரிவிலும் இரண்டு மொழிகளிலும் விண்ணப்பங்களை விநியோகிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

இலங்கை அரசியலமைப்பில் சிங்களம் மற்றும் தமிழ் அரசகரும மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம் மற்றும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் பலமானதொரு சட்ட ஏற்பாடு ஒன்றை தயாரித்திருக்கிறோம். எவ்வாறு இருந்தாலும், மொழி உரிமைகள் தொடர்பாக சட்ட அங்கீகாரம் மட்டும் போதாது. ஏட்டில் உள்ள உரிமைகள் மக்களின் வாழ்க்கையில் யதார்த்தமாக மாற வேண்டும் என்றார். (ந-7)

## புதிய அரசிய...

ஆட்சிபீடமேறிய பின் மறந்துவிட்டதா? என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா கேள்வியெழுப்பியுள்ளார்.

ஊடக நேர்காணலொன்றில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசமைப்பு இயற்றப்படும் என வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அநுர அரசு இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

"ஜனாதிபதி அநுர குமார நாட்டு மக்களுக்காகப் பல தடவைகள் உரையாற்றியுள்ளார். சர்வதேச மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார். எனினும், வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என அவர் கூறாமல் இருக்கின்றார்.

2015 - 2019 நல்லாட்சி காலத்தில் தயாரிக்கப்பட்ட அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசமைப்பு இயற்றப்படும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் எனவும் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது. அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதாக இருந்தால், அதற்குரிய பணிகளைத் தற்போது ஆரம்பித்திருக்க வேண்டும்.

அரசாங்கம் தனது பதவிக்காலத்தின் 4 மற்றும் 5 ஆவது வருடத்தில் புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய பணியை முன்னெடுப்பது, சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது என்பனவெல்லாம் நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகவே அமையும். ஆகவே, புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு எதிரணி முழு ஆதரவு வழங்கும்" என்றார். (ந-7)

## ஆனையிறவில்...

5 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற டிப்பரும் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வான் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

விபத்தில் வானில் பயணித்த பயணிகள் படுகாயங்களுக்குள்ளாகியிருந்தபோதும் தெய்வாதீனமாக உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை.

காயங்களுக்குள்ளானவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ந-7,104)

## நாட்டின் பாது...

வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்துரைத்த அவர்,

மேலும் தெரிவித்ததாவது, தேசிய பாதுகாப்புத் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு வகுப்பறையில் அமரவைத்து கற்பிப்பதாக முன்னர் குறிப்பிட்ட தற்போதைய அரசாங்கத்துக்கு தேசிய பாதுகாப்புத் தொடர்பில் நிற்க வைத்து கற்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாதாளக் குழுக்களுக்கும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ளமுரண்பாடு காரணமாகவே துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவதாக அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் குறிப்பிட முடியாது. பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளினால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கம் குறிப்பாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அனுபவமுள்ளவர்களை பாதுகாப்புத் தொடர்பான விடயதானங்களுக்கு ஜனாதிபதி நியமித்திருக்க வேண்டும். அவ்வாறு எதையும் இதுவரை செய்யவில்லை என்றார். (ந-7)

## டிஜிட்டல்...

ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டது. அதன்படி, அத்தகைய சேவைகளை வழங்குவதில் 18 வீத வற் வரி விதிக்கப்பட உள்ளது.

இவ் வரி விதிப்பு ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரவுள்ளதாகக் குறித்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 5883
K 0 7 1 1 4 5
அத சம்பத
K 1 1 4 5
சீட்டிழுப்பு இலக்கம் 0458
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.07.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1913
V 03 34 50 70 V
Double Chance 26468

மெகா பவர்
திகதி 07/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2231
I 22 09 13 42 73

ஜய
திகதி 2025.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 0151
L 1 2 8 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4125
சீட்டிழுப்பு திகதி 07.07.2025
M 08 35 64 72
M
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 1192
விருச்சிகம் 02 33 36 44 விருச்சிகம்
66443 21

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
07.07.2025 வெற்றி வாரம் 591
Z 9 8 3 5 4 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,796,138.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2857
சீட்டிழுப்பு திகதி 2025.07.07 தினம் திங்கட்கிழமை
21 64 72 80 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,609,108.00

சனிதா
07.07.2025 வெற்றி வாரம் 5018
15 43 58 61 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,895,435.20

ஜயோதா Jayoda
2025.07.07 வெற்றி வாரம் 2141
17 21 36 61 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,292,561.20

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4569
சீட்டிழுப்பு திகதி 07.07.2025 தினம் திங்கட்கிழமை
14 15 16 21 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,076,154.00

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 09 09 10 12 56
2033 07.07.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.581,352,305.20

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் 2683
சீட்டிழுப்பு திகதி 2025.07.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,846,582.40
41 68 72 76 B
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3356)

076 825 7716 (ஆகாஸ்)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

08.07.2025



தோற்றம் 18-04-1943
மறைவு 22-06-2021

தோற்றம் 11-04-1946
மறைவு 10-01-2022

அமரர் **துரையர் சந்தணம்**
(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (விசேட தரம்)
திதி : பூர்வபக்க திரயோதசி

அமரர் **சரஸ்வதி சந்தணம்**
திதி : பூர்வபக்க அட்டமி

(4746)

ஒற்றுமையின் இலக்கணமாய்
ஒருயிராய் ஈருடலாய்
செப்பமுற வாழ்ந்த
தெய்வங்களே நீரிருவர்
உற்றதுணை யின்றி நாம்
உலகமதில் துயர் சுமக்க
பெற்றவரே நீங்கள் எமைப்
பிரிந்து சென்ற தேன் தானோ?

"சந்தனம் சரஸ்வதி இல்லம்",
இல. 96, அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

நினைவோடு வணங்கி நிற்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## குருதியை...

நேற்று முன்தினம் வரை 47 எலும்புக்கூடுகள் இனங்காணப்பட்டிருந்த நிலையில், நேற்றுடன் செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து மொத்தமாக 52 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 47 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி வழக்கின் இரண்டாம் கட்டத்தின் பன்னிரண்டாம் நாள் நேற்று யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்றது.

இதேவேளை மனிதப் புதைகுழி அகழும் இடத்தில் துணிகளை ஒத்த சில பொருட்களும் அடையாளம் காணப்பட்டன.

அத்துடன் செய்மதிப் படம் மூலம் அடையாளம் காணப்பட்ட பகுதியிலும் அகழ்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. புதிதாக அகழும் பகுதியில் இனங்காணப்பட்ட மண்டையோடும் மீட்கப்பட்டது.

தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர், தடயவியல் பொலிஸார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்கள், நல்லூர் பிரதேச சபையின் ஊழியர்கள் இணைந்து அகழ்வுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ந-7,33,104)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட

**திருமதி சிந்துஜா சர்வேஸ்வரன்**

{National Diploma in Teaching (English) B.Ed & M.Ed (English Medium) SLTES}

அவர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். இவரை நாம் பாராட்டி மேலும் உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
யா/ஆனைக்கோட்டை
றோ.க.த.க.பாடசாலை சமூகம்

(4739)

## ஈஸ்டர்...

படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குருத்துவப் பணியின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த ஜனாதிபதி, விசாரணைகளை ஒருபோதும் மூழ்கடிப்பதற்கு இடம் வழங்காமல் நீதியை வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் நான் எடுப்பேன். அது ஒரு சவாலான விடயம் என்பதை நான் அறிந்துள்ளேன்.

சில சந்தர்ப்பங்களில் அரசாங்கம் அரச அதிகாரிகளிடம் விசாரணைகள் முன்னெடுக்கின்றன. அரசாங்கமே அரச அதிகாரிகளிடம் விசாரணைகளை முன்னெடுக்கும் பலவீனமான நிலையை எதிர்நோக்கியுள்ளது.

அரசாங்கத்திடமே விசாரணைகள் முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இங்கே நாம் நெருக்கடியாக உள்ளோம் என்பதைப் பார்த்தீர்களா இருப்பினும் நிச்சயம் நீதி வழங்கப்பட வேண்டும் அரசாங்கத்துக்கு எதிராகவே விசாரணைகளை முன்னெடுக்க வேண்டிவரினும் அதனை நிச்சயம் செய்வோம் என்றார். (ந-7)

**யோக்கட் கொள்வனவுகள்**

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம். (1307)

45/= ~~70/=~~

Happy Supermarket
உரும்பிராய்

+ 94 76 800 65 00

**கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை**

| | |
|---|---|
| 5-9 Kg | 3960/- |
| 11-16 Kg | 2790/- |
| 21-27 Kg | 2680/- |

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- France 11Kg - 2200/- Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3359)

**விற்பனைக்குண்டு**

எம்மிடம் விசேட வைபவங்களுக்குரிய பந்தல் குழைகள் உள்ளன.

தொடர்புகளுக்கு :
074 079 6060 (4740)

# மரண அறிவித்தல்

**திருமதி திலகவதி செல்வகுலசிங்கம் (திலகம் ரீச்சர்)**
**(ஓய்வுபெற்ற ஆசிரியை)**



மண்ணில் 10.07.1940 விண்ணில் 06.07.2025

யாழ். கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி செல்வகுலசிங்கம் அவர்கள் 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - பார்பதி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற திரு. வீரகத்தி செல்வகுலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் சுகன்யா, சுனித்தா(லவா), திருநீபன், ஷிரோமி ஆகியோரின் அன்புத் தாயாரும் மதிவண்ணன், நிரஞ்சன், துஷ்யந்தி, அபிராம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சஞ்ஜெயன், கிருத்திக், றிஷானி, அதிகன், ஆரன், உத்தரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம், சுந்தரேஸ்வரி, சிவலோகசுந்தரி, யோகேஸ்வரி, அரசரட்னம், புஸ்பாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பிறைசூடி, இரட்ணசிங்கம், அருந்தவநாயகி, காலஞ்சென்ற சகுந்தலா தேவி, இந்திராதேவி ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை 09.07.2025 புதன்கிழமை அன்று காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் மு.ப 10:00 மணியளவில் கரவெட்டி சோனப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சாமியன் அரசடி,
கொடிகாமம் வீதி, நெல்லியடி.

(3606)

தகவல் :
குடும்பத்தினர்

# 90 வது பிறந்தநாளும் 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

அமரர் **இராஜசிங்கம் நித்தியானந்தன்**
(ஓய்வுபெற்ற தூய பிரயோக கணித ஆசிரியர்)



திதி :துவாதசி

மலர்வு 08.07.1935
உதிர்வு 07.07.2020

ஒளி வீசும் உங்கள் திருவதனம்
மண்ணுலகை விட்டு விண்ணுலகம்
சென்றதேனோ?
விழிசேராமல் எம்மைக் காத்து
பிரிந்து சென்றீரோ?
இன்று உம் பிறந்ததின நன்னாளில்
பிரிவுத் துயர் தாங்காது தவிக்கின்றோமே!
உம் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இராமகபி,
துர்க்காபுரம், தெல்லிப்பளை.

(4726)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தா [illegible] யிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org